**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, PONNERI**

**Case No : STC No.114/2024**
**Petitioner Witness : PW 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : Arumugam | | : |
| Father Name | : Guruvappan | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(Accused present )**

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on the day of **10/02/2026**

**<u>குறுக்கு விசாரணை ( எதிரி தரப்பு )</u>**

நான் 15 ஆண்டுகளாக தண்ணீர் வண்டி ஓட்டி வருகிறேன். நான் தனிப்பட்ட முறையில் வண்டி எதுவும் வைக்கவில்லை தேவைப்படும் பட்சத்தில் டிரைவராக பணிபுரிந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனது சொந்த ஊர் தடம்பெரும்பாக்கம். அங்கு 20 ஆண்டுகளாக வசித்து வருகிறேன். எனக்கு தற்போது 48 வயது ஆகிறது. நான் பிறந்து வளர்ந்த ஊர் மாதவரம். நான் தற்போது வசித்து வரும் ஊர். தடம்பெரும்பாக்கம் தான். இவ்வழக்கின் எதிரியை எனக்கு 20 வருடங்களாக தெரியும். அவர் கோவில் நடத்தி வருகிறார் அதன் பேரில் எனக்கு தெரியும். என்னை ஆனந்தன் என்ற பெயராலும் அழைப்பார்கள். பிரபாகரன் என்பவரை எனக்கு தெரியாது.

கோவிந்தசாமி என்பவருக்கு எழுத படிக்க தெரியும் என்று எனக்கு தெரியும். அவருக்கு ஆங்கிலம் தெரியுமா என்று என்பதை பற்றி எனக்கு தெரியாது. எதிரியின் வீட்டில் வைத்து தான் என்னிடம் காட்டப்படும் காசோலையை எதிரி என்னிடம் 04.07.2024 அன்று காலை 10.00 மணியளவில் அளித்தார். அன்றைய தினம் 10 நிமிடங்கள் இருந்திருப்பேன். என் முன்னிலையில் வைத்து தான் எதிரி காசோலையை பூர்த்தி செய்தார் என்றால் அவருடன் வந்த 45 வயது நபர் தான் பூர்த்தி செய்து தந்தார். அவர் யார் என்று எனக்கு தெரியாது.